நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, திருமதி வசந்த பெரேரா, செயலாளர், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், திரு. ஜே.ஜே. ரத்னசிறி, தலைவர், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் (ONUR), திரு. தீப்தி லமாஹேவா, பணிப்பாளர் நாயகம், ONUR, மதிப்பிற்குரிய விருந்தினர்கள், தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் மற்றும் இந்த தேசத்தின் எதிர்காலமாகிய உற்சாகமான இளைஞர்கள்: ஆகிய அனைவருக்கும் வணக்கம்!

உலகம் சர்வதேச சமாதான தினத்தை கொண்டாடிய ஒரு தினத்தின் பின்னர், நாம் ஒன்று கூடும் இவ்வேளையில், சமாதானத்தினை ஒரு கருத்தாகக் கொண்டாடுவது மட்டுமன்றி, அதை நடைமுறைப்படுத்துவதற்கு நமக்கு நாமே உறுதிபூணுவோம்.

குறிப்பாக இலங்கை சுதந்திரமடைந்து 75ஆவது ஆண்டு நிறைவினை நினைவுகூரும் இத்தருணமானது அபிவிருத்தி, சவால்கள் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பகிரப்பட்ட பயணமாக விளங்கும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் தொடர்பாகச் சிந்திக்கவும் செயற்படவும் ஒரு சிறந்த தருணமாகும்.

இந்த வாரம், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக உலகத் தலைவர்கள் நியூயோர்க் நகரில் ஒன்றுகூடினர். சமாதானம் தொடர்பாக அதிகம் பேசப்பட்டது. எனினும் உக்ரைனின் மீது மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான படையெடுப்பு மற்றும் சூடானில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி ஆகியவற்றில் நாம் அவதானிப்பது போன்று, சமாதானம் என்பது எவ்வாறு ஒரு நாள் நிலவி திடீரென்று அது மாற்றமடைந்து இறுதியில் மீண்டும் கட்டமைப்பதற்குப் பல ஆண்டுகள் செல்லக்கூடிய அடைவதற்குக் கடினமான ஒரு விடயமாக இருக்கலாம். உலகெங்கிலும், பல ஜனநாயக நாடுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதைக் காண்கிறோம். சில அச்சுறுத்தல்கள் உள்நாட்டில் உள்ளன -- புரிந்துணர்வையும் சமாதானத்தையும் மேம்படுத்துவதற்குப் பதிலாக மனக்கசப்புகளைப் பயன்படுத்தி பயத்தைத் தூண்டுபவர்களிடமிருந்து அவை உருவாகின்றன.

சமூகங்கள் தமக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை ஆதிக்கம் செலுத்துவதற்கான காரணங்களாக மாற்றி அவை தொடர்பாக சண்டையிடுவதற்குப் பதிலாக, பன்முகத்தன்மை ஏற்படுத்தும் செழுமைக்காக அவற்றைக் கொண்டாடுகின்ற அவற்றை ஆரத்தழுவிக்கொள்கின்ற ஒரு உலகினைக் கற்பனை செய்து பாருங்கள்.

திறந்த, சுதந்திரமான, செழிப்பான மற்றும் பாதுகாப்பான ஒரு உலகிற்கான எதிர்காலம் தொடர்பான ஒரு பகிரப்பட்ட பார்வையில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. உரிய நேரத்தில் நடைபெறும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் உட்பட ஜனநாயக செயன்முறைகள் ஊடாக தங்களதும், தமது சமூகங்களதும், தமது நாட்டினதும், எதிர்காலத்தினை வடிவமைக்கக்கூடிய இயலுமையினைக் கொண்ட, தமது அன்றாட வாழ்வில் ஒவ்வொரு தனிநபரும் சுதந்திரமாக, நிம்மதியாக வாழுகின்ற ஒரு உலகம்.

பிளவுகள் மற்றும் சமாதானத்திற்கான சவால்கள் எனது சொந்த நாட்டிலும் ஏற்படுகின்றன, எனினும் பணிவுடன் நாங்கள் அதை ஒப்புக்கொள்வதுடன் அவற்றை நிவர்த்தி செய்து “மிகவும் பூர்த்தியான ஒரு இணைவாக” மாறுவதற்கு நாங்கள் உறுதியுடன் பணியாற்றுகிறோம். உலகளாவிய ரீதியில் நாங்கள் மேற்கொள்ளும் பணியில் எமது அரசு சாரா நிறுவன பங்காளர்களின் பங்களிப்பும் அவசியமாகும்.

USAID ஊடாக, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க முன்முயற்சி போன்ற முன்முயற்சிகளுக்கு உதவி செய்வதில் அமெரிக்கத் தூதரகம் பெருமையடைகிறது. SCORE நிகழ்ச்சியானது "சமாதானத்திற்கான தேசிய நடவடிக்கைகளை ஊக்குவித்தல்" எனும் இன்றைய ஒன்றுகூடலின் கருப்பொருளை உள்ளடக்குவது மட்டுமன்றி ஒரு ஒருங்கிணைந்த தேசிய அடையாளத்தை உருவாக்குதல், பொருளாதார வளர்ச்சிக்கான பாதையை வகுத்தல், மற்றும் எமது சமூகங்களை, குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களை சமாதானத்தின் கலங்கரை விளக்கங்களாக மாற்றுதல் ஆகிய விடயங்களுக்கும் அது உதவுகிறது.

அமெரிக்க தூதுவரின் மகனாக 50 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தற்போது அமெரிக்க செனட்டராகவுள்ள கிறிஸ் வேன் ஹோலன் கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். நானும் அவரும் சேர்ந்து கண்டியிலுள்ள விக்டோரியா கிராமிய மீனவர் சங்கத்தின் உறுப்பினர்களைச் சந்தித்ததுடன், SCORE நிகழ்ச்சித்திட்டத்தினால் உதவி செய்யப்படும் பல்வேறு மதங்கள் மற்றும் பின்னணிகளைக் கொண்ட பல்வேறு சமூகங்களைக் கொண்ட உள்ளூர் கிராமத்திற்கு உதவி செய்யும் ஒரு உள்நாட்டு மீன்பிடி செயற்திட்டத்தினையும் ஆரம்பித்து வைத்தோம். சமாதானத்தை பல வழிகளில் அடைய முடியும் எனவும், ஒரு பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பினைச் சுற்றி ஒரு சமூகத்தை ஒன்றிணைப்பதானது அதைச் செய்வதற்கு உதவி செய்யும் எனவும் நாங்கள் நம்புகிறோம்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நீதி அமைச்சு மற்றும் அடிமட்டத் தலைவர்களுடனான SCORE இன் பணி பாராட்டத்தக்கது. மூன்று தசாப்த கால முரண்பாடுகளின் எச்சங்கள், அச்சுறுத்தும் பொருளாதார நெருக்கடி, மற்றும் கலாச்சார மற்றும் மத சகிப்பின்மை தொடர்பான நிகழ்வுகள் போன்ற எமக்கு முன்னாலுள்ள சவால்களை நிவர்த்தி செய்வதற்கான எமது முயற்சிகள் தொடர வேண்டும். மீண்டெழும்தன்மையுடைய மற்றும் இணக்கமான ஒரு இலங்கையினை உருவாக்குவதற்கான ஒரு ஒன்றிணைந்த அர்ப்பணிப்பு எமக்குண்டு. நீதி அமைச்சின் பலமான பங்காண்மை இன்றி நிச்சயமாக எம்மால் இந்தப் பணிகளில் எதனையும் மேற்கொள்ள முடியாது எனவே இன்று இங்கு வருகைதந்தமைக்காக அமைச்சருக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

இந்நிகழ்வானது அதன் துடிப்பான கண்காட்சிகள் மற்றும் மாணவர் பங்களிப்புகளுடன், ஐக்கியமான, சமாதானயான மற்றும் வளமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதைக் காட்டுகிறது.

இளைஞர்களே, எதிர்கால வழிகாட்டிகள் நீங்களே. உங்களை இங்கு காண்பது எனக்கு மிகவும் உற்சாகமளிக்கிறது, இச்சரிதையில் தொடர்ந்து ஈடுபடவும், அதைத் தொடர்ந்து சவாலுக்குட்படுத்தவும், அதன் வடிவத்தை மீளமைக்கவும் உங்களை நான் ஊக்குவிக்கிறேன். இலங்கையின் கலாச்சார பன்முகத்தன்மையினைக் கொண்டாடுங்கள் மற்றும் இந்த தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் உங்கள் குரல் எதிரொலிப்பதை உறுதிப்படுத்துங்கள். இளைஞர்களை நாட்டின் எதிர்காலமாக அங்கீகரித்து அவர்களுக்கு அதிகாரம் அளிக்குமாறு இன்றைய தலைவர்களை நான் ஊக்குவிக்கிறேன். நாம் அனைவரும் எதிர்காலம் தொடர்பான ஒரு நேர்மறையான எதிர்பார்ப்புடன் இருப்போம் - பொருளாதார ஸ்திரத்தன்மை, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் புத்தாக்கத்தினைக் கட்டியெழுப்புதல் ஆகிய விடயங்களில் மட்டுமன்றி, ஊழலுக்கு எதிராக ஜனநாயகம் மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றத்தைப் பாதுகாப்பதிலும் லட்சியத்துடன் இருப்போம். அமைதியான போராட்டத்தின் ஊடாகவோ, கலைகள் ஊடாகவோ

அல்லது சமூக ஊடகங்கள் ஊடாகவோ கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சுதந்திரத்தின் மதிப்புகளை தியாகம் செய்வதன் மூலம் ஸ்திரத்தன்மையினை அடையக்கூடாது.

இறுதியாக, இன்றைய நிகழ்வின் சாரத்தினையும் சர்வதேச சமாதான தினத்தின் வாக்குறுதியையும் நாம் ஏற்றுக்கொள்ளும் இவ்வேளையில், மனநிறைவை அடையக்கூடாது எனக் கூற விரும்புகிறேன். சமாதானத்திற்காகப் பாடுபடுவது மட்டுமன்றி, அதை எமது செயல்களால் நிலைநாட்டவும் நாம் உறுதிபூணுவோம். அமெரிக்காவின் சிறந்த முதல் பெண்மணிகளில் ஒருவரான எலினோர் ரூஸ்வெல்ட்டின் இந்த வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள்: “சமாதானயைப் பற்றிப் பேசினால் மட்டும் போதாது. அதை நம்ப வேண்டும். மற்றும் அதை நம்புவது மட்டும் போதாது. அதை அடைவதற்காகப் பணியாற்றவும் வேண்டும்.

சமாதானத்தில் தொடர்ந்து நம்பிக்கை வைப்பதற்கும், இலங்கையின் நீடித்த செழிப்பிற்காக உங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் இன்று நான் உறுதியளிக்கிறேன். நன்றி.